
# திராவிடத்தால் வாழ்கிறோம்

770

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

ர.பிரகாசு

1

## புதிய தொடர்

**தமிழ்நாடே பெரியார் மண்தான் என்றாலும், அவரின் கொள்கையில் ஏதேனும் ஒன்றையோ அல்லது சிலவற்றையோ 100% கடைப்பிடிக்கும் ஊர்கள் தமிழ்நாட்டில் ஏராளம் உள்ளன. அவ்வூர்களை அனைவருக்கும் அறிமுகப்படுத்தும் முயற்சியே இத்தொடர்.**

# இது பெரியார் மண்



ஆதிக்கமும் அடிமைத்தனமும் அற்ற தமிழ்ச் சமூகம் அமையப் பாடுபட்டதே, பாடுபட்டுக் கொண்டிருப்பதே திராவிட இயக்கத்தின் தலையாய பணி. ‘நீதிக்கட்சி’, ‘சுயமரியாதை இயக்கம்’, ‘திராவிடர் கழகம்’, ‘திராவிட முன்னேற்றக் கழகம்’ என இயக்கங்கள் காலத்துக்கேற்ப பரிணமித்தாலும் அடிநாதக் கொள்கை அதுவே. ஆதிக்கம் செலுத்துகிற ஆரியத்திற்கு எதிராக, அதன் மேலாதிக்கத்தைத் தகர்க்க திராவிட இயக்கம் வகுப்புரிமையைப் பேசியது, கல்வியின் அவசியத்தை வலியுறுத்தியது, பெண்ணுரிமைக்காகப் போராடியது, சாதி ஆதிக்கத்தை எதிர்த்து நின்றது. இவற்றுக்கெல்லாம் அச்சாரமாக இருந்த மதம்- கடவுள்- சாஸ்திரங்களைக் கேள்விக்குள்ளாக்கியது.

பண்பாட்டு ரீதியில் தமிழ்- தமிழர் அடையாளத்தை அழிக்கத் தூக்கி வரப்பட்ட இந்தி ஆதிக்கத்தைத் தடுத்தது. ஆரியத்துக்கு எதிராக தனித்துவமான ‘திராவிடர்’ அடையாளத்தைத் தமிழ் மண்ணில் வலுவாக முன்வைத்தது.

ஒரு நூற்றாண்டுக்கால இந்தத் தொடர் தாக்குதல்தான் ஒட்டுமொத்த இந்தியாவில் இருந்தும் தனித்துவமான தமிழ்நாட்டை உருவாக்கியது. கல்வியில் தமிழ்நாட்டைப் போல வளர்ந்த மாநிலம் வேறில்லை. சுகாதாரக் கட்டமைப்பில், தமிழ்நாட்டுக்கு நிகராக வளர்ந்து நிற்கும் பெரிய மாநிலம் இந்தியத் துணைக்கண்டத்திலேயே இல்லை. வேலைவாய்ப்பில், தனிநபர் வருமானத்தில், வாழ்வாதாரப் பாதுகாப்பில் என மானுட வளர்ச்சிக்கான எந்தக் குறியீட்டை எடுத்தாலும், அதில் தமிழ்நாடு உயர்ந்து நிற்கிறது. காரணம் இது ‘பெரியார் மண்’. பெரியார் வார்த்தெடுத்த திராவிட இயக்கக் கொள்கைகளில் ஊறிப் பக்குவப்பட்ட மண்.

எல்லோரும் படிக்க வேண்டுமென்று ஒரு நூற்றாண்டுக்கு முன்பு திராவிட இயக்கம் கொடுத்த குரல், இன்று படிப்பின் அவசியத்தை ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் பெற்றோர் ஊடாக குழந்தைகளுக்குக் கடத்திக் கொண்டிருக்கிறது. மானுடர் அனைவரும் ஓரினம்- நமக்குள் ஏன் ஓராயிரம் பிளவுகள் என்ற சனாதனக் கோட்பாட்டுக்கு எதிரான திராவிடக் குரல்தான் சமத்துவபுரங்களாகத் தமிழ்நாடெங்கும் வளர்ந்து நிற்கின்றன. கடவுளைத் தொழ ஏன் சாதிக்கு ஒரு சட்டம் என்று எந்தக் கடவுளும் கேட்கவில்லை, ஆனால், திராவிட இயக்கம் கேட்டது, அதனால் விளைந்ததுதான் ‘அனைத்துச் சாதி அர்ச்சகர்’ சட்டம். இப்படி தமிழ்நாடு, ‘பெரியார் மண்’ என்ற நிறுவ ஆயிர மாயிரம் சான்றுகள் உள்ளன.

ஆனால், பெரியாரின் கோட்பாட்டில் - கொள்கையில் ஏதேனும் ஒன்றை 100% செயல்படுத்திய அசல் பெரியார் மண்ணாகத் தமிழ்நாடு முழுவதும் எண்ணற்ற ஊர்கள் உள்ளன. பெரியார் பேச்சால் ஈர்க்கப்பட்டு, ‘கோயில் வேண்டாம்’ என முடிவெடுத்த ஊர், சடங்கு-சம்பிரதாயங்களை விட்டொழித்து, சுயமரியாதைத் திருமணங்களை 100% தழுவிய ஊர், ஊரும்-சேரியும் இணைந்து சாதிப்பாகுபாட்டை ஒழித்துவிட்டு, ஒன்றாக வாழும் ஊர், மதப் பண்டிகைகள் வேண்டாம் என்று முடிவெடுத்து, தமிழரின் தன்மான விழாவாம் பொங்கல் பண்டிகையை மட்டுமே கொண்டாடும் ஊர் என, வானில் மின்னும் நட்சத்திரங்கள் போல பகுத்தறிவுக் கொள்கையில் மிளிரும் ஊர்கள் தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்கே உள்ளன. அவற்றை அறிமுகப்படுத்தி, அந்தப் பகுத்தறிவு உணர்வை தமிழ்நாடெங்கும் கடத்தும் முயற்சிதான் ‘பெரியார் மண்’ தொடர்.

வாரம் ஒன்றாக வாசிப்போம் அத்தகைய பகுத்தறிவு கிராமங்களை...

## மக்கள்நலனில் மகத்தான சாதனை!

தமிழ்நாடு முழுவதும் 1,000 ‘முதல்வர் மருந்தகங்கள்’ பிப்ரவரி 24-ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சரால் தொடங்கி வைக்கப்பட்டன. இதில் தனியார் மூலமாக 462 முதல்வர் மருந்தகங்களும், கூட்டுறவு நிறுவனங்கள் வாயிலாக, 538 முதல்வர் மருந்தகங்களும் தொடங்கப்பட்டுள்ளன. தனியார் நடத்தும் முதல்வர் மருந்தகத்திற்கு 3 லட்சம் ரூபாயும், கூட்டுறவு நிறுவனம் நடத்தும் முதல்வர் மருந்தகத்திற்கு 2 லட்சம் ரூபாயும் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த முதல்வர் மருந்தகங்களில் 50% முதல் 75 % வரை குறைந்த விலைக்கு, மருந்துகள் விற்கப்படுகின்றன.

இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்ட முதல் 8 நாட்களில், அதாவது மார்ச் 3-ஆம் தேதி வரை முதல்வர் மருந்தகங்களில் தனியார் கடைகளில் 13 லட்சத்து 73 ஆயிரத்து 449 ரூபாய்க்கும், கூட்டுறவு நிறுவனக் கடைகளில் 13 லட்சத்து 69 ஆயிரத்து 380 ரூபாய்க்கும் என மொத்தம் 27 லட்சத்து 42 ஆயிரத்து 829 ரூபாய்க்கு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. தள்ளுபடி விலையில், மருந்துகள் விற்கப்படுவது ஏழை-எளியோருக்குப் பயனுள்ளதாய் அமைந்துள்ளது.

தனியார் நடத்தும் கடைகளில், 22 ஆயிரத்து 332 பேரும், கூட்டுறவு நிறுவன முதல்வர் மருந்தகங்களில் 27 ஆயிரத்து 721 பேரும் என மொத்தம் 50 ஆயிரத்து 53 பேரும் பயனடைந்துள்ளனர். இந்தத் திட்டத்தின் மூலம் 1,000 பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

மக்களைத் தேடி மருத்துவம், ‘இன்னுயிர் காப்போம் - நம்மை காக்கும் 48’ உள்ளிட்ட திட்டங்களைப் போல மக்கள் நல்வாழ்வுத்துறையின் மகத்தான சாதனைத் திட்டங்களில் ஒன்றாக ‘முதல்வர் மருந்தகம்’ திட்டமும் உருவெடுத்திருப்பது அதனைப் பயன்படுத்தும் ஏழை - எளியோரால் உறுதியாகியுள்ளது.

## ஃப்ளாஷ்பேக்



### கலைஞரிடம் பெற்ற பரிசு!



இரா.திருமலை

நான் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் பொழுது, ‘வாணியம்பாடி முத்தமிழ் மன்றம்’ நடத்தும் மாவட்ட அளவிலான கல்லூரி மாணவர்களுக்கு, இடையிலான கவிதைப் போட்டியில் பரிசு பெற்றால், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் கைகளால் பரிசு பெறலாம் என்று எங்கள் பேராசிரியர் கா.ஷேக் மீரான் அவர்கள் வகுப்பறையில் அறிவித்தார். அதேபோல் நடைபெற்ற கவிதைப் போட்டியில் வென்று, 30.01.2000 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களிடம் பரிசு பெற்றேன். கலைஞரிடம் பரிசு பெற்றபோது எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.

**- இரா.திருமலை, குடியாத்தம்(தா), வேலூர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

# பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

52

**“கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்...”**



## முன்னெச்சரிக்கை செய்யும் முதல்வர்!

**‘உடனடியாக குழந்தை பெற்றுக் கொள்ளுங்கள் என்று பெண்களை அறிவுறுத்தியிருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர்’ என்று வடஇந்திய ஆங்கில சேனல்களில் செய்தி வெளியிட்டு, விவாதம் நடத்துகிறார்களே?**

மக்கள் தொகை அடிப்படையில், நாடாளுமன்றத் தொகுதிகளை மறுசீரமைப்பு செய்தால், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைச் சரியாகக் கடைப்பிடித்த தமிழ்நாடு உள்ளிட்ட தென்மாநிலங்களுக்கான மக்கள் பிரதிநிதித்துவம் குறையும் என்பதை வலியுறுத்தி, அனைத்துக் கட்சிக் கூட்டத்தை, தமிழ்நாடு முதலமைச்சர் நடத்தியது, அகில இந்திய அளவில் அரசியல் களத்தின் பேசுபொருளாகியுள்ளது. எல்லா வகையிலும், தமிழ்நாட்டையும் தென்னிந்திய மாநிலங்களையும் வஞ்சிக்கின்ற ஒன்றிய பா.ஜ.க. அரசின் மற்றொரு சதித்திட்டம் குறித்து, முன்கூட்டியே எச்சரிக்கை மணி அடித்திருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர்.

அவருடைய கருத்துக்கு கர்நாடகா, தெலங்கானா மாநில முதலமைச்சர்களும் ஆதரவு தெரிவித்து, பா.ஜ.க. அரசின் நோக்கத்தைக் கண்டித்துள்ளனர். மற்றொரு தென்னிந்திய மாநிலமான ஆந்திராவில் பா.ஜ.க. கூட்டணியான தெலுங்கு தேசம் கட்சியின் ஆட்சி நடைபெறுகிறது. அதன் முதல்வர் சந்திரபாபு நாயுடு, தங்கள் மாநிலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட இரு குழந்தைகள் திட்டத்தை ரத்து செய்து, அதிக குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளும்படி பெற்றோரை வலியுறுத்தியிருக்கிறார்.

சந்திரபாபு நாயுடு, நிதிஷ்குமார் தயவில்தான் மைனாரிட்டி பா.ஜ.க. ஆட்சியை நடத்தி வருகிறார், பிரதமர் மோடி. அதனால், நேரடியாக சந்திரபாபு நாயுடுவை விமர்சித்து விவாதம் நடத்த முடியாது. அதனால், பா.ஜ.க.வின் ஊதுகுழலான ஊடகங்கள் மூலம், தமிழ்நாடு முதலமைச்சர் ஒரு திருமண விழாவில் நகைச்சுவையாகக் குறிப்பிட்டதை முன்வைத்து, ‘விவாதம்’ என்ற பெயரில் திசை திருப்பப் பார்த்தனர்.

> **“முதலமைச்சரின் தொகுதி மறுசீரமைப்பு குறித்த முன்னெச்சரிக்கை முன்னெடுப்பு நாட்டின் பேசுபொருளாகி, அவர்களின் மூக்கை பதம் பார்த்துவிட்டது.”**

நாட்டின் வளர்ச்சிக்காக அறிவிக்கப்பட்ட ஒரு திட்டத்தைச் சரியாக செயல்படுத்திய மாநிலங்களுடைய தொகுதியைக் குறைத்து, தண்டனை அளிப்பதும், மக்கள்தொகைக் கட்டுப்பாட்டு நெறிமுறைகளைக் கடைப்பிடிக்காமல் எண்ணிக்கையைப் பெருக்குகிற மாநிலங்களுக்கு அதிகத் தொகுதிகளை ஒதுக்குவதும், எந்த வகையில் நியாயம் என்பதுதான் தமிழ்நாடு முதலமைச்சரின் கேள்வி. இந்த நியாயத்தை அவர் முன்வைக்கும் போது, பொதுமக்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில், ‘தொகுதி மறுசீரமைப்பில் தமிழ்நாட்டின் தொகுதிகள் குறையாமல் இருக்க வேண்டுமென்றால், நீங்கள் உடனடியாக குழந்தை பெற்றுக்கொள்ள வேண்டும்’ என்று ஒன்றிய அரசின் போக்கைக் கிண்டலாகக் குறிப்பிட்டுவிட்டு, ‘அளவோடு பெற்று வளமோடு வாழ்க’ என்றும், ‘மணமக்களுக்குப் பிறக்கின்ற குழந்தைக்குத் தமிழில் பெயர் சூட்டுங்கள்’ என்றும் சொல்லியிருக்கிறார் முதலமைச்சர்.

மொழித் திணிப்புக்காரர்களுக்கு தமிழ்ப் பெயர் என்றால் இனிக்குமா? கசக்கத்தானே செய்யும். அதனால் திசை திருப்பப் பார்த்தார்கள். ஆனால், முதலமைச்சரின் தொகுதி மறுசீரமைப்பு குறித்த முன்னெச்சரிக்கை முன்னெடுப்பு நாட்டின் பேசுபொருளாகி, அவர்களின் மூக்கை பதம் பார்த்துவிட்டது.

**...வினா தொடரும்.**

## கருவூலம்

### மொழிதான் உயிர்!

2006-ஆம் ஆண்டு, பேராசிரியர் அ.இராமசாமி எழுதிய ஆங்கில நூலான ‘Struggle for Freedom of Languages in India’ ‘மொழிப் போராட்ட வரலாறு’ நூலை வெளியிட்டுப் பேசினார் கலைஞர். அந்த நிகழ்ச்சியில் பேசும் போது,“மொழிதான் ஒரு நாட்டின் உயிர் - நாட்டைக் காப்பாற்றக்கூடிய அரண்” எனவே, இந்தியாவின் ஆட்சி மொழிகளில் தமிழும் ஒன்று என்கிற நல்லசெய்தியே நம் தியாகத்திற்குக் கிடைத்த வெற்றியாக அமையும்” எனக் குறிப்பிட்டார்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.